# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-2 | Date | : 25.02.2026 |
| Case No. | : **O.S. 4/2019** | Nationality | : Indian |
| Name | : கலியபெருமாள் | Religion | : |
| Father's/Husband's Name | : சாமிநாதன் | Age | : 60 |
| Village | : ஆரலூர் | | |
| Taluk | : திருவிடைமருதூர் | | |

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நிரந்தரமாக ஆலலூர் கிராமத்தில் வசித்து விவசாய தொழில் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது அதில் நான்தான் சாகுபடி செய்து வருகிறேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வயல் சொந்தம் என்று வழக்கு போட்டுள்ளார். என்ன பரிகாரம் என்று தெரியாது. வாதிக்கு ஆரலூர் கிராமத்தில் அநேக சொத்துக்கள் உள்ளது. சொத்துக்களின் புல எண் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. வாதி அவரது நிலத்தில் நேரடியாக சாகுபடி செய்து வருகிறார். அவருக்கு உடன்பிறந்த சகோதரர்கள் உள்ளார்கள். நான் விவசாய வேலைக்காக எல்லா ஊர்களுக்கும் செல்வேன் என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமான வயலிலும், திடலிலும் நான் விவசாய வேலை செய்தேன். நான் வேலை செய்த தேதி மாதம் வருடம் குறிப்பிட்டு சொல்ல இயலாது. ராஜேந்திரன் தாவா நிலத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்று யார் சொல்லி தெரியும் என்றால் யாரும் சொல்லவில்லை. ராஜேந்திரனுக்கு சொந்தமான நிலத்தை அவர் சாகுபடி செய்து அனுபவம் செய்து வருகிறார்

என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் புல எண் எனக்கு தெரியாது. நான் முதன்மை வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).